## சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்– புதுக்கோட்டை மாவட்டம் – கந்தர்வக்கோட்டை வட்டாரம் – அங்கன்வாடி பணியாளர் திருமதி.எஸ்.கலாராணி 100% கண்பார்வை குறைபாடு காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்டது – சிறப்பினமாக சிறப்பு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியப் பயன்கள் வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7) துறை

அரசாணை (நிலை) எண்.18

நாள்.11.02.2013
திருவள்ளுவராண்டு 2044
தை 29
படிக்கப்பட்டது:

1 அரசாணை (நிலை) எண்.4, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 09.01.1995.
2 அரசாணை (நிலை) எண்.146, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 16.11.2009
3 புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் ந.க.எண்.507/2010/அ1, நாள் 16.12.2010.
4 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையரக ந.க.எண்.300/இ3–2/2011, நாள் 06.03.2012 மற்றும் 05.09.2012.

+++++

ஆணை :

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மேலே 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரம் அண்டனூர் குழந்தைகள் மையத்தில் அங்கன்வாடி பணியாளராக பணிபுரிந்த திருமதி.எஸ்.கலாராணி என்பவர் கண்பார்வை குறைபாட்டினால் 11.3.2009 முதல் தொடர்ந்து விடுப்பில் இருந்து வந்தார். அன்னாரின் கண்பார்வை குறித்த ஆய்வு செய்த தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவக்குழு, திருமதி.எஸ்.கலாராணி அங்கன்வாடி பணியாளராக பணிபுரிய தகுதியற்றவர் என சான்றளித்தது. மேற்கண்ட மருத்துவக்குழு சான்றினைத் தொடர்ந்தும், 11.3.2009 முதல் தொடர்ந்து 6 மாதங்களுக்கு மேலாக நீண்ட விடுப்பில் இருந்து வந்தக்காரணத்தாலும் அரசாணை எண்.4, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 9.1.1995ன் படி, திருமதி.எஸ்.கலாராணி அங்கன்வாடி பணியாளர் 11.3.09 முதல் நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்டார்.

2. பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையின் படி, "நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்ட அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர் பதவியை ராஜினாமா செய்த பணியாளர்களும் சிறப்பு ஓய்வூதியம் ரூ.700/– பெற தகுதியற்றவர்கள்." எனினும், நிரந்தர

பணிநீக்கம் செய்யப்பட்ட திருமதி.எஸ்.கலாராணி என்பவர் 01.07.82 முதல் தொடர்ந்து 27 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளதாலும், மேலும் 12 ஆண்டுகள் பணிபுரிய வயது உள்ள சூழ்நிலையிலும் மருத்துவ சான்றின் பேரில் நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்ட காரணத்தாலும், அன்னாருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளதாலும், கணவர் விவசாய கூலியாக உள்ள காரணத்தாலும், அங்கன்வாடி பணியாளர்களுக்கு வழங்க பெறும் சிறப்பு ஓய்வூதியம் ரூ.700/– மட்டும் திருமதி.எஸ்.கலாராணி என்பவருக்கு சிறப்பினமாக கருதி வழங்குமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பார்வை 4ல் படிக்கப்பட்ட கடிதங்களில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரது கருத்துருவை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட முதன்மைச் செயலர்/சிறப்பு ஆணையரும் பரிந்துரைத்து, இந்நிகழ்வை சிறப்பு நேர்வாக கருதி திருமதி.எஸ்.கலாராணி என்பவருக்கு ஓய்வூதியமும் மற்றும் இதர ஓய்வூதியப் பயன்கள் பெறவும் அனுமதித்து ஆணைவழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர்/சிறப்பு ஆணையரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து 100% கண்பார்வை குறைபாடு காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்ட அங்கன்வாடி பணியாளர் திருமதி.எஸ்.கலாராணி என்பவருக்கு, சிறப்பினமாக, சிறப்பு ஓய்வூதியமும், ஏனைய ஓய்வூதியப் பயன்களையும் வழங்குவதற்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர்/சிறப்பு ஆணையருக்கு அதிகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் அ.சா.எண்.16311/மா.தி.ந2–1/2012, நாள் 16.11.2012. மற்றும் நிதி (சந) த்துறையின் அ.சா.எண். 62772/2012, நாள் 03.01.2013ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அசோக் டோங்ரே
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலர்/சிறப்பு ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், சென்னை–113.
மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை
மாவட்ட திட்ட அலுவலர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
புதுக்கோட்டை
வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்,
வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம்,
கந்தர்வகோட்டை
மாநில கணக்காயர், சென்னை – 18
மாநில கணக்காயர் (தணிக்கை–I/II), சென்னை –18
கருவூலர் அலுவலர், மாவட்ட கருவூலம், புதுக்கோட்டை
உதவி கருவூல அலுவலர், சார்நிலை கருவூலம்,
கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்

நகல்
மாற்றுத் திறனாளிகள் நல (மா.திந2–1) துறை, சென்னை –9
நிதி (சந) (ஓய்வூதியம்) துறை, சென்னை –9
மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.